

一级 • 第一学期 • 第二部分

# தமிழ்
# 泰米尔

## 泰米尔虚拟学院

金奈 - 25

www.tamilvu.org

# தமிழ்

# 泰米尔

## 一级

第一学期

第二部分

泰米尔虚拟学院
金奈 - 25

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே !
தமிழணங்கே !
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்

## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமை மிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

## வாழ்த்துரை

சீர்மிகு சிங்காரச் சென்னையிலே செந்தமிழ் காக்கும் நிறுவனமாக விளங்குகிறது, தமிழ் இணையக் கல்விக் கழகம். இக்கழகத்தின் வாயிலாகத் தமிழ்ப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக உலகமெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்கள், தமிழை விருப்பத்துடன் கற்றுக் கொள்ளும் அயல்நாட்டினர், தமிழ்மீது ஆர்வம் கொண்ட தமிழ்ப் பற்றாளர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வகையில், தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன.

தமிழை ஒரு பாடமாகக் கற்காமல், ஒரு மொழியாகக் கற்போமானால், அதன் அடிப்படைத் திறன்களில் வல்லமையுடன் விளங்கமுடியும். ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்பது, மதிப்பெண் பெறுவதற்காக அன்று. அம்மொழியில் இயல்பாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் செய்யவேண்டும். அம்மொழியின் அழியாப் புகழ்பெற்ற இலக்கியங்களைப் படித்து, அவற்றின் சுவையுணர்தல் வேண்டும். தாம் படித்து மகிழ்ந்ததுடன், மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி, அதன் சிறப்பை உணர்த்தவேண்டும். அவ்வகையில், ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்னும் பாரதியின் கூற்று ‘உலகளாவிய தமிழ்’ என மெய்ப்படும்.

செம்மொழியாம் தமிழ்மொழியை எட்டுத் திக்கும் பரப்பும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சீரிய பணி குறிப்பிடத்தக்கது. எளிமையாக, இனிமையாகக் கற்றுக் கொள்ளும் வகையில் கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல், தமிழை விருப்பத்துடன் கற்பதற்குத் தூண்டுகிறது. தமிழ்ப்பண்பாட்டுக்கூறுகள் சிறு சிறு செயல்பாடுகள் வாயிலாகப் பாடநூலில் இடம்பெற்றிருப்பது தமிழின் சிறப்பை வலுப்படுத்த உதவுகிறது. தமிழர் பெருமையையும் தமிழின் சிறப்பையும் உலகம் முழுவதும் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிலங்கும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இப்பெருமைமிகு பணி மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

(மு.க. ஸ்டாலின்)
முதலமைச்சர்

M.K. Stalin
Chief Minister of Tamil Nadu

Secretariat
Chennai - 600 009.

# Greetings message

Tamil Virtual Academy with its base in Chennai serves as a premiere institution that preserves the Tamil language. Over the years, the institution has been pivotal in promoting Tamil. As a part of this, Tamil textbooks have been created for the benefit of the Tamil diaspora across the world, foreigners interested in learning Tamil and language enthusiasts.

If we can learn Tamil as a language instead of an academic subject, we can demonstrate stronger foundational skills of language learning. Learning a language should not be for the purpose of grades. One must be able to speak, read and write seamlessly in the language. The eternally popular literature of the language should be read and relished. Once we have enjoyed reading them, we should elucidate their significance to others. If we can abide by the quotes of Bharathi 'we should spread the sound of Tamil, which is as sweet as honey, to this entire earth', we can make Tamil universal.

The work of the Tamil Virtual Academy towards the promotion and dissemination of classical Tamil language is noteworthy. The book, written based on a curriculum which has been designed to learn easily, kindles enthusiasm to learn Tamil. The inclusion of cultural elements in the textbook through simple activities helps in highlighting the distinct features of Tamil. I convey my wishes to Tamil Virtual Academy for continuing the extraordinary work of spreading the significance of the Tamils and the greatness of the Tamil language globally.

M.K.Stalin
Chief Minister

த. மனோ தங்கராஜ்
அமைச்சர் தகவல் தொழில்
நுட்பவியல் துறை

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009

நாள் – 29.6.2022

## அணிந்துரை

இனிமைத் தமிழ்மொழி எமது என்னும் பெருமைக்கு உரியவர்கள் நாம். தமிழின் இனிமையை உணர்ந்தே தமிழ் இலக்கண, இலக்கியங்கள் இன்று உலகம் முழுவதும் அனைவராலும் படிக்கப்படுகின்றன. பாராட்டப்படுகின்றன. அத்தகைய வளமிக்க நம் மொழியைக் கற்றுக் கொள்வது எளிது. கற்றுத் தருவதும் எளிது. அதன் சிறப்புணர்ந்தே தமிழ் இணையக் கல்விக் கழகம் இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. உலகம் எங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களுக்காகவும் தமிழை விரும்பிக் கற்க விழைபவர்களுக்காகவும் எளிமையாகக் கொண்டுசெல்லும் முயற்சியை மேற்கொள்கிறது.

இன்று இணையத்தில் மிகுதியாகப் பயன்பாட்டிலுள்ள மொழியாகத் தமிழ் விளங்குகிறது. தமிழ் இணையக் கல்விக் கழகம் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தமிழ்ப் பாடநூலை உருவாக்கியுள்ளது.

நிலை – 1, முதல் பருவத்திற்கான இப்பாடநூல், தமிழை மிக எளிமையாக அறிமுகம் செய்கிறது. கண்கவர் வண்ணப்படங்கள் மூலம் எழுத்துகளும் சொற்களும் தொடர்களும் அறிமுகம் செய்யப்படுகின்றன. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எளிய செயல்பாடுகள், ஓசைநயமிக்க எளிய பாடல்கள், இயல்பான பேச்சுத் தமிழ் உரையாடல்கள் எனப் பாடநூல் முழுவதும் விரவியுள்ளன. பாடநூலுக்கு வலிமை சேர்க்கும் வகையில் விரைவுத் துலங்கல் குறியீடுகள், காணொலிப் படங்கள், படித்தல் செயல்பாடுகளுக்கான ஒலிப்பதிவு நாடாக்கள், பாடப்பொருளை நன்கு கற்றுத் தருவதற்கு உதவும் துணைக்கருவிகள் என அனைத்தும் ஒரு தொகுப்பாக உருவாக்கப்பட்டிருப்பது, தமிழ்மீதான ஆர்வத்தைத் தமிழ் கற்பவர்களிடையே ஏற்படுத்துகிறது.

பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நூல், தமிழின் பெருமை, தமிழர் பண்பாடு, கலை முதலான அனைத்தையும் அறிந்துகொள்வதற்கு நல்வாய்ப்பை அமைத்துச் சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளது எனில் அது மிகையன்று. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இப்பணி மேலும் தொடரவேண்டும் என்று என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(த. மனோ தங்கராஜ்)

T. Mano Thangaraj
Minister for Information
Technology and Digital Services

Secretariat
Chennai - 600 009.

# Foreword

We are proud of our beautiful language, Tamil. As many have started realising the importance of Tamil, the grammar and literature of the language are being learnt and appreciated across the globe. Learning such a rich language is easy. It is also easy to teach. Realising its speciality, the Tamil Virtual Academy has been working effectively towards achieving these educational goals. It strives to make it easier for the Tamil diaspora living all over the world and for Tamil enthusiasts to learn Tamil.

Today, Tamil is being used extensively on the internet. The Tamil Virtual Academy has utilized this opportunity and developed textbooks for learning Tamil.

This textbook for Level 1- Term 1, introduces the Tamil language in a simple manner. Letters,Words and Sentences are introduced through attractive and colourful illustrations. The textbook is filled with simple activities, melodic songs, and day-to-day conversations in spoken Tamil to stimulate the students' interest. To add strength to the textbook, quick response (QR) codes, audio-visual content, supplements for effective teaching of the subject are all presented as a single package, thus creating a passion for the language among the learners.

This book, which is translated in many languages, has provided an avenue for the appreciation of the significance of the Tamil language as well as the art and culture of the Tamil people. I would like to extend my appreciation and best wishes to the Tamil Virtual Academy for the continuation of this venture.

T. Mano Thangaraj
Minister for Information Technology and Digital Services

| 第 | 内容 | | 课 页码 |
|---|---|---|---|
| 9 | 双字母单词<br>语法<br>单复数<br>唱一唱<br>儿童诗歌 | 听力理解<br>舞蹈、欣喜和庆祝 | 01 |
| 10 | 数字名字、形状<br>唱一唱<br>儿童诗歌 | 听力理解<br>狮子和鹿<br>（故事） | 23 |
| 11 | 简单语法<br>语法<br>代词<br>唱一唱<br>儿童诗歌 | 听力理解<br>购物中心<br>（对话） | 38 |
| 12 | 简单语法<br>语法<br>常见的同形异义词错误<br>唱一唱<br>儿童诗歌 | 听力理解<br>分享的乐趣 | 52 |
| 13 | 简单语法<br>语法<br>名词，动词, 形容词，副词<br>唱一唱<br>儿童诗歌 | 听力理解<br>我的愿望！（对话） | 66 |

| 第 课 | 内容 | | 页码 |
| --- | --- | --- | --- |
| 14 | 简单语法<br>**语法**<br>格位标记<br>**唱一唱**<br>儿童诗歌 | **听力理解**<br>健康生活你我他！ | 83 |
| 15 | 复习活动 | | 95 |


音频课程

视频课程

评估

# வணக்கம்

பாடம் / 第 9



9.1 பேசுவோம் / 说一说




**சொற்கள் / 单词**

எலி பூனை வா போ இழு தா பிடி ஏறு

வாழைப்பழம் சிங்கம் முயல் பானை குரங்கு

## 9.2 அறிவோம் / 学一学

### ஓரெழுத்துச் சொல் / 单字母词

தமிழில் ஓரெழுத்து, பொருள் உணர்த்தும் சொல்லாகவும் வரும். அவற்றுள் சில எழுத்துகளை அறிந்து கொள்வோம்.



கை



ஈ



பூ



தீ




மை



பை

## 9.3 திரும்பப் படிப்போம் / 再读一遍

கை ஈ பூ மை பை தீ

### புதிய சொற்கள்
### 生词

நீ நா மா வை

## 9.4 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



பூ மணக்கும்



ஈ பறக்கும்



கை கொடுப்போம்



தீ சுடும்

## பயிற்சி / 小试牛刀

### இணைப்போம் / 连一连

தீ    மை    ஈ    பை    பூ












## 9.2.1 அறிவோம் / 学一学

**ஈரெழுத்துச் சொல் / 双字母单词**

| | | | |
|---|---|---|---|
| ஆ | மை | = | ஆமை |
| பு | றா | = | புறா |
| நி | லா | = | நிலா |
| வீ | ணை | = | வீணை |
| ப | சு | = | பசு |
| கி | ளி | = | கிளி |
| ஆ | டு | = | ஆடு |
| இ | லை | = | இலை |
| ம | லை | = | மலை |
| மீ | ன் | = | மீன் |

## 9.3.1 திரும்பப் படிப்போம் / 再读一遍

### ஈரெழுத்துச் சொல் / 双字母单词

| | | | | |
|---|---|---|---|---|
| ஆமை | புறா | நிலா | வீணை | பசு |
| கிளி | ஆடு | இலை | மலை | மீன் |

### புதிய சொற்கள்
### 生词

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காடு | இடி | காது | ஓடை | பொன் | பனி |
| தேன் | பால் | வாள் | வால் | யாழ் | மணி |

## 9.4.1 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



குடை பிடிக்கிறான்



மீன் நீந்துகிறது



கதை எழுதுகிறான்



சிலை செய்கிறார்

## பயிற்சி / 小试牛刀

## சொல் உருவாக்குவோம் / 我们来组词

1. கா
2. வீ
3. தோ
4. ஆ

டு

1. ______________
2. ______________
3. ______________
4. ______________

1. கா
2. பா
3. வா
4. வி

ல்

1. ______________
2. ______________
3. ______________
4. ______________

| | | |
|---|---|---|
| 1. ம | | 1. ________ |
| 2. மா | | 2. ________ |
| 3. சி | லை | 3. ________ |
| 4. அ | | 4. ________ |

| | | |
|---|---|---|
| 1. க | | 1. ________ |
| 2. ம | | 2. ________ |
| 3. உ_ | ண் | 3. ________ |
| 4. எ | | 4. ________ |

## 9.5 பாடி மகிழ்வோம் / 唱一唱

### அதோ பாராய்!

குதித்துக் குதித்தே ஓடும்
குதிரை அதோ, பாராய்!
அசைந்து அசைந்து செல்லும்
ஆனை இதோ, பாராய்!
பறந்து பறந்து போகும்
பருந்து அதோ, பாராய்!
நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை இதோ, பாராய்!
தத்தித் தத்திப் போகும்
தவளை அதோ, பாராய்!
துள்ளித் துள்ளி நாமும்
பள்ளி செல்வோம், வாராய்!

– அழ. வள்ளியப்பா



## 9.1.1 பேசுவோம் / 说一说





### சொற்கள் / 单词

ஆமை – ஆமைகள்    முயல் – முயல்கள்    நாய்– நாய்கள்

குதிரை– குதிரைகள்    யானை– யானைகள்

## 9.2.2 அறிவோம் / 学一学

**ஒருமை – பன்மை**

**单数　　复数**



மான்



மான்கள்



குடை



குடைகள்



பந்து



பந்துகள்



வீடு



வீடுகள்



அணில்



அணில்கள்

## 9.3.2 திரும்பப் படிப்போம் / 再读一遍

| ஒருமை 单数 | பன்மை 复数 |
| --- | --- |
| மான் | மான்கள் |
| குடை | குடைகள் |
| பந்து | பந்துகள் |
| வீடு | வீடுகள் |
| அணில் | அணில்கள் |

### புதிய சொற்கள் 生词

| | |
| --- | --- |
| மீன் | மீன்கள் |
| பை | பைகள் |
| பெட்டி | பெட்டிகள் |

## 9.4.2 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



குரங்கு



குரங்குகள்



குயில்



குயில்கள்



மாணவர்



மாணவர்கள்

# பயிற்சிகள் / 练习

## (அ) பொருத்துவோம் / (a) 连一连



ஆமை



மணிகள்



கோழி



ஆமைகள்



பெண்



ஆண்கள்



ஆண்



பெண்கள்



மணி



கோழிகள்

## (ஆ) சொல் உருவாக்குவோம்
## (b) 我们来组词

கண்

கதை

ஆடை

காடு

ஏணி

கள்

## விரும்பிச் செய்வேன் / 我会心甘情愿地去做

வேறுபாட்டைக் கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்



## 9.6 கேட்டல் கருத்தறிதல் / 听力理解

### ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
### 舞蹈、欢呼和庆祝 故事

கவி : மாமா, ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமாய் இருக்கு. என்ன நடக்குது?

மாமா : அதுவா, கவி! நம்ம ஊர்ல நாட்டுப்புறக் கலை விழா நடக்குது.

கவி : ஓ அப்படியா ! வாங்க மாமா பாப்போம்.

மாமா : ம்ம்.... போகலாமே!.

கவி : அதோ பாருங்க, மாமா. கையில துணி வச்சு ஆடுறாங்களே அது என்ன ஆட்டம்?

மாமா : அதுதான் கவி ஒயிலாட்டம்.

கவி : ஓ... அழகா இருக்குல்ல. சரி, மாமா. அங்கே பாருங்க. மயில் போல வேஷம் போட்டு ஆடுறாங்க.

மாமா : அது மயிலாட்டம், கவி.

கவி : ரொம்ப அழகாக இருக்குல்ல.

மாமா : ஆமா. அதோ அங்க பாரு! அந்தப் பறை இசைக்கு எவ்ளோ ஆர்வமா ஆடுறாங்க.

கவி : அத கேட்கும்போது எனக்கும் ஆடத் தோணுது, மாமா.

மாமா : ஆமாம் கவி! எனக்கும் அப்படியேதான் இருக்கு!

## குறிப்புகள் / 参考

| தமிழ் | Chinese | Transliteration |
|---|---|---|
| வணக்கம் | 问候语 | vaṇakkam |
| 9.1 பேசுவோம் | 9.1 说一说 | 9.1 pēcuvōm |
| சொற்கள் | 单词 | coṟkaḷ: |
| எலி | 鼠 | eli |
| பூனை | 猫 | pūṉai |
| வா | 来 | vā |
| போ | 走 | pō |
| இழு | 拉 | iḻu |
| தா | 给 | tā |
| பிடி | 抱 | piṭi |
| ஏறு | 爬 | ēṟu |
| வாழைப்பழம் | 香蕉 | vāḻaippaḻam |
| சிங்கம் | 狮子 | ciṅkam |
| முயல் | 兔子 | muyal |
| பானை | 锅 | pāṉai |
| குரங்கு | 猴子 | kuraṅku |
| ஓரெழுத்துச் சொல் | 单字母词 | ōreḻuttuc col |
| தமிழில் ஓரெழுத்து, பொருள் உணர்த்தும் சொல்லாகவும் வரும். | 在泰米尔语中，一个字母就可以成为一个有意义的词。 | tamiḻil ōreḻuttu, poruḷ uṇarttum collākavum varum. |
| அவற்றுள் சில எழுத்துகளை அறிந்து கொள்வோம். | 让我们来学习其中的一些字母 | avaṟṟuḷ cila eḻuttukaḷai aṟintu koḷvōm. |
| கை | 手 | kai |
| ஈ | 家蝇 | ī |
| பூ | 鲜花 | pū |

| | | |
|---|---|---|
| தீ | 火 | tī |
| மை | 墨水 | mai |
| பை | 袋子 | pai |

| புதிய சொற்கள் | 生词 | putiya coṟkaḷ |
|---|---|---|
| நீ | 你 | nī |
| நா | 舌 | nā |
| மா | 芒果 | mā |
| வை | 保持 | vai |

## 9.4 சொல்லிப் பழகுவோம் / 9.4 说一说，练一练 / 9.4 collip paḻakuvōm

| | | |
|---|---|---|
| பூ மணக்கும் | 花是香的 | pū maṇakkum |
| ஈ பறக்கும் | 家蝇飞了 | ī paṟakkum |
| கை கொடுப்போம் | 我们握手吧 | kai koṭuppōm |
| தீ சுடும் | 火燃烧 | tī cuṭum |

## 9.2.1 அறிவோம் / 9.2.1 学一学 / 9.2.1 aṟivōm

| ஈரெழுத்துச் சொல் | 双字母单词 | īreḻuttuc col |
|---|---|---|
| ஆமை | 乌龟 | āmai |
| புறா | 鸽子 | puṟā |
| நிலா | 月亮 | nilā |
| வீணை | 维纳琴 | vīṇai |
| பசு | 牛 | pacu |
| கிளி | 鹦鹉 | kiḷi |
| ஆடு | 山羊 | āṭu |
| இலை | 叶子 | ilai |
| மலை | 山地 | malai |
| மீன் | 鱼 | mīṉ |

| புதிய சொற்கள் | 生词 | putiya coṟkaḷ |
| --- | --- | --- |
| காடு | 森林 | kāṭu |
| இடி | 雷声 | iṭi |
| காது | 耳朵 | kātu |
| ஓடை | 溪流 | ōṭai |
| பொன் | 黄金 | poṉ |
| பனி | 雪 | paṉi |
| தேன் | 蜂蜜 | tēṉ |
| பால் | 牛奶 | pāl |
| வாள் | 剑 | vāḷ |
| வால் | 尾巴 | vāl |
| யாழ் | Yazh | yāḻ |
| மணி | 珠子 | maṇi |

| 9.4.1 சொல்லிப் பழகுவோம் | 9.4.1 说一说 , 练一练 | 9.4.1 collip paḻakuvōm |
| --- | --- | --- |
| குடை பிடிக்கிறான் | 他打着伞 | kuṭai piṭikkiṟāṉ |
| மீன் நீந்துகிறது | 鱼在游泳 | mīṉ nīntukiṟatu |
| கதை எழுதுகிறான் | 他在写一个故事 | katai eḻutukiṟāṉ |
| சிலை செய்கிறார் | 他在制作雕像 | cilai ceykiṟāṉ |

## 9.5 பாடி மகிழ்வோம் | 9.5 pāṭi makil̲vōm

**அதோ பாராய்!** | **Atō pārāy!**

| | |
|---|---|
| குதித்துக் குதித்தே ஓடும் | Kutittuk kutittē ōṭum |
| குதிரை அதோ, பாராய்! | kutirai atō, pārāy! |
| அசைந்து அசைந்து செல்லும் | Acaintu acaintu cellum |
| ஆனை இதோ, பாராய்! | ān̲ai itō, pārāy! |
| பறந்து பறந்து போகும் | Par̲antu par̲antu pōkum |
| பருந்து அதோ, பாராய்! | paruntu atō, pārāy! |
| நகர்ந்து நகர்ந்து செல்லும் | Nakarntu nakarntu cellum |
| நத்தை இதோ, பாராய்! | nattai itō, pārāy! |
| தத்தித் தத்திப் போகும் | Tattit tattip pōkum |
| தவளை அதோ, பாராய்! | tavaḷai atō, pārāy! |
| துள்ளித் துள்ளி நாமும் | Tuḷḷit tuḷḷi nāmum |
| பள்ளி செல்வோம், வாராய்! | paḷḷi celvōm, vārāy! |
| – அழ. வள்ளியப்பா | - Al̲a. Vaḷḷiyappā |

## 9.1.1 பேசுவோம் | 9.1.1 说一说 | 9.1.1 pēcuvōm

| | | |
|---|---|---|
| ஆமை – ஆமைகள், | 乌龟-龟类 | āmai - āmaikaḷ, |
| முயல்– முயல்கள், | 兔-兔类 | muyal- muyalkaḷ, |
| நாய்– நாய்கள், | 狗-狗类 | nāy- nāykaḷ, |
| குதிரை– குதிரைகள் | 马-马类 | kutirai- kutiraikaḷ |
| யானை– யானைகள் | 大象-象类 | yān̲ai- yān̲aikaḷ |

## 9.2.2 அறிவோம் | 9.2.2 学一学 | 9.2.2 ar̲ivōm

| | | |
|---|---|---|
| **ஒருமை – பன்மை** | **单数 – 复数** | **orumai – pan̲mai** |
| மான் – மான்கள் | 鹿 - 鹿 | mān̲ – mān̲kaḷ |
| குடை – குடைகள் | 雨伞- 许多伞 | kuṭai – kuṭaikaḷ |

| | | |
|---|---|---|
| பந்து – பந்துகள் | 球-许多球 | pantu – pantukaḷ |
| வீடு – வீடுகள் | 房屋-许多房屋 | vīṭu – vīṭukaḷ |
| அணில் – அணில்கள் | 松鼠-许多松鼠 | aṇil – aṇilkaḷ |

| புதிய சொற்கள் | 生词 | putiya coṟkaḷ |
|---|---|---|
| மீன்– மீன்கள் | 鱼 许多鱼 | mīṉ -mīṉkaḷ |
| பை– பைகள் | 袋子 许多袋子 | pai- paikaḷ |
| பெட்டி –பெட்டிகள் | 箱子 许多箱子 | petti -peṭṭikaḷ |

## 9.4.2 சொல்லிப் பழகுவோம் 9.4.2 说一说，练一练 9.4.2 collip paḻakuvōm

| | | |
|---|---|---|
| குரங்கு – குரங்குகள் | 猴子 许多猴子 | kuraṅku - kuraṅkukaḷ |
| குயில் – குயில்கள் | 布谷鸟 许多布谷鸟 | kuyil - kuyilkaḷ |
| மாணவர் – மாணவர்கள் | 学生 许多学生 | māṇavar - māṇavarkaḷ |

## 9.6 听力理解

### 舞蹈、欢呼和庆祝 故事

卡维 ：叔叔，那里到处在跳舞、欢呼和庆祝。 那里发生了 什么事？

叔叔 ：哦……那个！ 我们村正在举行乡村艺术节

卡维 ：是吗？来吧，叔叔，我们去看看。

叔叔 ：好啊，走吧

卡维 ：看那边，叔叔 他们手里拿着一块布，正在跳舞。那是什么？

叔叔 ：那叫 “Oyilaattam”，卡维

卡维 ：看那边，叔叔 一个人装扮成孔雀在跳舞。

叔叔 ：这就是 “Mayilaattam”。

卡维 ：它非常漂亮

叔叔 ：是的，非常漂亮。看那边，他们在欢快地跳舞。

卡维 ：我自己听到 “Parai” 的鼓声也想跳舞。

叔叔 ：是的，卡维. 我也想跳舞

## 9.6 Kēṭṭal karuttaṟital

### āṭṭam pāṭṭam koṇṭāṭṭam

Kavi : Māmā, āṭṭam pāṭṭam koṇṭāṭṭamāy irukku. Eṉṉa naṭakkutu?

Māmā : Atuvā, kavi! Nam'ma ūrla nāṭṭuppuṟak kalai viḻā naṭakkutu.

Kavi : Ō appaṭiyā! Vāṅka māmā pāppōm.

Māmā : M'm…. Pōkalāmē!.

Kavi : Atō pāruṅka, māmā. Kaiyila tuṇi vaccu āṭuṟāṅkaḷē atu eṉṉa āṭṭam?

Māmā : Atutāṉ kavi oyilāṭṭam.

Kavi : Ō… aḻakā irukkulla. Cari, māmā. Aṅkē pāruṅka. Mayil pōla vēṣam pōṭṭu āṭuṟāṅka.

Māmā : Atu mayilāṭṭam, kavi.

Kavi : Rompa aḻakāka irukkulla.

Māmā : Āmā. Atō aṅka pāru! Antap paṟai icaikku evḷō ārvamā āṭuṟāṅka.

Kavi : Ata kēṭkumpōtu eṉakkum āṭat tōṇutu, māmā.

Māmā : Āmām kavi! Eṉakkum appaṭiyētāṉ irukku!

# வணக்கம்

பாடம் / 第 10



## 10.1 பேசுவோம் / 说一说





## 10.2 அறிவோம் / 学一学

ஒன்று – 1 

இரண்டு – 2 

மூன்று – 3 

நான்கு – 4 

ஐந்து – 5 

ஆறு – 6 

ஏழு – 7 

எட்டு – 8 

ஒன்பது – 9 

பத்து – 10 

## 10.3 திரும்பப் படிப்போம் / 再读一遍

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | இரண்டு | மூன்று | நான்கு | ஐந்து |
| ஆறு | ஏழு | எட்டு | ஒன்பது | பத்து |

## 10.4 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



பத்து விரல்



மூன்று பழம்



ஏழு நிறம்



நான்கு குடம்

## 10.5 பாடி மகிழ்வோம் / 唱一唱

### ஒன்று... இரண்டு... மூன்று...



ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று



இரண்டு முகத்தில் கண் இரண்டு



மூன்று முக்காலிக்குக் கால் மூன்று



நான்கு நாற்காலிக்குக் கால் நான்கு



ஐந்து ஒருகை விரல் ஐந்து



ஆறு ஈக்குக் கால் ஆறு




ஏழு வாரத்தின் நாள் ஏழு



எட்டு சிலந்தியின் கால் எட்டு



ஒன்பது தானிய வகை ஒன்பது



பத்து இருகை விரல் பத்து

## பயிற்சிகள் / 练习

(அ) எழுத்துகளை வரிசைப்படுத்தி எழுதுவோம்

(a) 请给字母排序

1. று ன் ஒ ____________

2. டு இ ண் ர ____________

3. ன் மூ று ____________

4. நா கு ன் ____________

5. ந் து ஐ ____________

6. று ஆ ____________

7. ழு ஏ ____________

8. ட் எ டு ____________

9. ன் து ஒ ப ____________

10. து ப த் ____________

(ஆ) பொருத்துவோம் / (b) 请把图片和对应的字母连起来

 ○ ○ ஐந்து

 ○ ○ நான்கு

 ○ ○ இரண்டு

 ○ ○ மூன்று

## 10.1.1 பேசுவோம் / 说一说



## 10.2.1 அறிவோம் / 学一学



வட்டம்



சதுரம்



செவ்வகம்



முக்கோணம்

## 10.3.1 திரும்பப் படிப்போம் / 再读一遍

| | |
|---|---|
| வட்டம் | சதுரம் |
| செவ்வகம் | முக்கோணம் |

## 10.4.1 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



வட்ட நிலா




சதுரக் கடிகாரம்



செவ்வகப் பலகை



முக்கோணக் கூரை

## பயிற்சிகள் / 练习

(அ) பொருத்துவோம் / (a) 连一连

















(ஆ) நிரப்புவோம் / (b) 把正确的字母填入空白处



வட் ____ ம்

| | |
|---|---|
| டு | ட |



முக் _____ ணம்

| | |
|---|---|
| கோ | கே |



ச _____ ரம்

| | |
|---|---|
| து | த |



செ _____ வகம்

| | |
|---|---|
| வி | வ் |

## விரும்பிச் செய்வேன் / 我会心甘情愿地去做

முக்கோணத்தை ◯ இடுவேன்; வட்டத்தை □ போடுவேன்



## 10.6 கேட்டல் கருத்தறிதல் / 听力理解

**சிங்கமும் மானும் / 狮子和鹿**



சிங்கத்துக்குக் காலில் அடிபட்டது. அதனால் நடக்க முடியவில்லை. அந்த வழியாக ஒரு மான்குட்டி வந்தது. அது சிங்கத்தைப் பார்த்து வருந்தியது. இதனைச் சிங்கம் கவனித்தது. அது மான்குட்டியை அருகே அழைத்தது. "நண்பா!, நீ வீரன். தீய எண்ணம் இல்லாதவன். இந்த வழியாகப் பல விலங்குகள் சென்றன. அவை என்னைப் பார்த்துக் கேலியாகப் பேசின. என் காயத்தைப் பார்த்துச் சிரித்தன" என்று கூறியது. சிங்கத்தின் கவலையைப் புரிந்துகொண்ட மான், "அட! விடுங்கள் இப்போது ஓய்வு எடுங்கள். கால் குணம் ஆகட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று ஆறுதல் கூறியது.

# குறிப்புகள் / 参考

| தமிழ் | | Chinese | | Transliteration | |
|---|---|---|---|---|---|
| வணக்கம் | | 问候语 | | vaṇakkam | |
| **10.2 அறிவோம்** | | **10.2 学一学** | | **10.2 aṟivōm** | |
| ஒன்று – 1 | ஆறு – 6 | 一 - 1 | 六 - 6 | oṉṟu – 1 | āṟu – 6 |
| இரண்டு – 2 | ஏழு – 7 | 二 - 2 | 七 - 7 | iraṇṭu – 2 | ēḻu – 7 |
| மூன்று – 3 | எட்டு – 8 | 三- 3 | 八 - 8 | mūṉṟu - 3 | eṭṭu - 8 |
| நான்கு – 4 | ஒன்பது – 9 | 四 - 4 | 九 - 9 | nāṉku - 4 | oṉpatu – 9 |
| ஐந்து – 5 | பத்து – 10 | 五 - 5 | 十 - 10 | aintu - 5 | pattu – 10 |

| | | |
|---|---|---|
| **10.4 சொல்லிப் பழகுவோம்** | **10.4 说一说 , 练一练** | **10.4 collip paḻakuvōm** |
| பத்து விரல் | 十个手指 | pattu viral |
| மூன்று பழம் | 三个水果 | mūṉṟu paḻam |
| ஏழு நிறம் | 七种颜色 | ēḻu niṟam |
| நான்கு குடம் | 四个盆子 | nāṉku kuṭam |

| | |
|---|---|
| **10.5 பாடி மகிழ்வோம்** | **10.5 pāṭi makiḻvōm** |
| **ஒன்று... இரண்டு... மூன்று...** | **Oṉṟu… iraṇṭu… mūṉṟu…** |
| ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று | oṉṟu yāvarkkum talai oṉṟu |
| இரண்டு முகத்தில் கண் இரண்டு | iraṇṭu mukattil kaṇ iraṇṭu |
| மூன்று முக்காலிக்குக் கால் மூன்று | mūṉṟu mukkālikkuk kāl mūṉṟu |
| நான்கு நாற்காலிக்குக் கால் நான்கு | nāṉku nāṟkālikkuk kāl nāṉku |
| ஐந்து ஒருகை விரல் ஐந்து | aintu orukai viral aintu |
| ஆறு ஈக்குக் கால் ஆறு | āṟu īkkuk kāl āṟu |
| ஏழு வாரத்தின் நாள் ஏழு | ēḻu vārattiṉ nāḷ ēḻu |
| எட்டு சிலந்தியின் கால் எட்டு | eṭṭu cilantiyiṉ kāl eṭṭu |
| ஒன்பது தானிய வகை ஒன்பது | oṉpatu tāṉiya vakai oṉpatu |
| பத்து இருகை விரல் பத்து | pattu irukai viral pattu |

| 10.1.1 பேசுவோம் | 10.1.1 说一说 | 10.1.1 pēcuvōm |
|---|---|---|
| வட்டம் | 圆形 | vaṭṭam |
| சதுரம் | 方形 | caturam |
| செவ்வகம் | 长方形 | cevvakam |
| முக்கோணம் | 三角形 | mukkōṇam |

| 10.2.1 அறிவோம் | 10.2.1 学一学 | 10.2.1 aṟivōm |
|---|---|---|
| வட்டம் | 圆形 | vaṭṭam |
| சதுரம் | 方形 | caturam |
| செவ்வகம் | 长方形 | cevvakam |
| முக்கோணம் | 三角形 | mukkōṇam |

| 10.4.1 சொல்லிப் பழகுவோம் | 10.4.1 说一说 , 练一练 | 10.4.1 collip paḻakuvōm |
|---|---|---|
| வட்ட நிலா. | 圆月 | vaṭṭa nilā. |
| சதுரக் கடிகாரம். | 方形手表 | caturak kaṭikāram. |
| செவ்வகப் பலகை. | 长方形黑板 | cevvakap palakai |
| முக்கோணக் கூரை | 三角形的房子 | mukkōṇak kūrai |

## 10.6 听力理解

### 狮子和鹿

狮子的腿受伤了。无法走路。一只鹿经过，看到了狮子的样子，替它难过。狮子注意到这只露，于是请鹿靠近点儿，然后对鹿说："伙计，你是一名战士，从不撒谎，不虚伪。有许多动物经过这里时，都会捉弄我，取笑我的伤口。"。鹿理解狮子心里的难过，便安慰狮子道："别担心。"好好休息，等腿慢慢痊愈，然后再来解决这些事情。"

## 10.6 Kēṭṭal karuttaṟital

### ciṅkamum māṉum

Ciṅkattukkuk kālil aṭipaṭṭatu. Ataṉāl naṭakka muṭiyavillai. Anta vaḻiyāka oru māṉkuṭṭi vantatu. Atu ciṅkattaip pārttu varuntiyatu. Itaṉaic ciṅkam kavaṉittatu. Atu māṉkuṭṭiyai arukē aḻaittatu. "Naṇpā!, Nī vīraṉ. Tīya eṇṇam illātavaṉ. Inta vaḻiyākap pala vilaṅkukaḷ ceṉṟaṉa. Avai eṉṉaip pārttuk kēliyākap pēciṉa. Eṉ kāyattaip pārttuc cirittaṉa"eṉṟu kūṟiyatu. Ciṅkattiṉ kavalaiyaip purintukoṇṭa māṉ, "aṭa! Viṭuṅkaḷ ippōtu ōyvu eṭuṅkaḷ. Kāl kuṇam ākaṭṭum. Piṟaku pārttuk koḷḷalām"eṉṟu āṟutal kūṟiyatu.

பாடம் / 第 11

# வணக்கம்




11.1 பேசுவோம் /
说一说

## 11.2 அறிவோம் / 学一学

மூவிடப் பெயர் / 人称代词 (I, II & III 人称)



**நான்** படிக்கிறேன்



**நாம்** படிக்கிறோம்



**நீ** ஓடுகிறாய்



**நீங்கள்** ஓடுகிறீர்கள்



**அவள்** ஆடுகிறாள்



**அவர்கள்** ஆடுகிறார்கள்



காகம் பறந்து வந்தது.
**அது** மரக்கிளையில் அமர்ந்தது.



மான்கள் குளத்தின் அருகே வந்தன. **அவை** நீர் குடித்தன.

# மூவிடப் பெயர்
# 人称代词

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
| --- | --- | --- |
| தன்னைக் குறிப்பது | தனக்கு முன்னே இருப்பவரைக் குறிப்பது | தன்னையும், முன்னால் இருப்பவரையும் குறிக்காமல் மூன்றாவதாக இருப்பவரைக் குறிப்பது |
| நான், நாங்கள், நாம் | நீ, நீங்கள் | அவன், அவள், அவர், அது, அவை |

## 11.3 திரும்பப் படிப்போம் / 再读一遍

| நான் | நாம் |
| --- | --- |
| நீ | நீங்கள் |
| அவள்/ அவன் | அவர்கள் |
| அது | அவை |

## 11.4 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练



நான் பாடுகிறேன்



நீங்கள் விளையாடுகிறீர்கள்



அவன் எழுதுகிறான்



அது மரம்

## 11.5 பாடி மகிழ்வோம் / 唱一唱

### ஓடி விளையாடு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா

–பாரதியார்



## பயிற்சிகள் / 练习

(அ) பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்
( a ) 请选择并写出适当的单词

[நான், அவன், அவர்கள், நாம், நீ] / [我/他/她/我们/你]



_____________ ஓடினான்



_____________ ஆடுகிறார்கள்



_____________ படிக்கிறேன்



_____________ எழுதுகிறாய்



_____________ பேசுவோம்

(ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுப்போம்
( b ) 请选择正确的单词

1. ______________ படிக்கிறேன். [நான் / நாம்]

2. ______________ வரைகிறாய். [நீ / நீங்கள்]

3. கண்ணன் மரம் ஏறினான். ______________ பழம் பறித்தான்.

[அவன் /அவள்]

4. வள்ளி ஓடினாள். ______________ வெற்றி பெற்றாள்.

[அவன் /அவள்]

5. தலைவர்கள் வந்தார்கள். ______________ பேசினார்கள்.

[அவர்கள் / அவர்]

6. யானை வந்தது. ______________ நீர் குடித்தது. [அது /அவை]

(இ) பொருத்துவோம் / (c) 连一连



நீ நன்றாக ஆடுகிறாய்.



அவன் எழுதினான்



அவை சிங்கங்கள்



அவர்கள் பேசினார்கள்

(ஈ) பொருத்தமான சொல்லை நிரப்புவோம்

（d）请填写适当的单词

என் பெயர் நீலா. ___________ (நான்/ நீ) மாலாவுடன் கடைக்குச் சென்றேன். அங்கு நிறைய பொம்மைகள் இருந்தன. ___________ (அவர்கள்/அவை) அழகாக இருந்தன. ___________ (நீங்கள்/ நாங்கள்) பொம்மைகளை வாங்க விரும்பினோம். மாலா, மயில் பொம்மையை வாங்கினாள். ___________ (அது/ அவை) அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. "___________ (நீ/ அவள் ) எதுவும் வாங்கவில்லையா?" என்று மாலா என்னிடம் கேட்டாள். ___________ (உனக்கு/ எனக்கு) யானைப் பொம்மை வேண்டும் என்று கூறினேன். "___________ (நாங்கள்/ நீங்கள்) வேறு ஏதாவது பார்க்கிறீர்களா?" என்று கடைக்காரர் கேட்டார்.

## விரும்பிச் செய்வேன் / 我会心甘情愿地去做

யார் கையில் எந்த நிறம்? கண்டுபிடிப்பேன்; வண்ணமிடுவேன்



## 11.6 கேட்டல் கருத்தறிதல் / 听力理解

**வணிக வளாகம் / 购物中心**



| | | |
|---|---|---|
| அண்ணன் | : | உங்களுக்கு என்ன வேணும்? |
| தம்பி | : | எனக்குக் கைக்கடிகாரம் வேணும். |
| தங்கை | : | அண்ணா! எனக்குப் பட்டுப்பாவாடை வேணும். |
| அண்ணன் | : | சரி, வாங்கலாம். |
| தங்கை | : | அங்க என்ன விளையாடுறாங்க? |
| அண்ணன் | : | அது பௌலிங் அலே (Bowling Alley) |
| தங்கை | : | அண்ணா, நாம போய் விளையாடலாமா? |
| அண்ணன் | : | விளையாடலாமே. |
| தம்பி | : | அண்ணா, எனக்கு இந்த விளையாட்டு விளையாடத் தெரியாதே! |
| அண்ணன் | : | அப்படியா, சரி. நாம படம் பார்க்கலாமா? |
| தம்பி | : | ஆமாம் அண்ணா, நானும் அதைத்தான் நினைச்சேன். |
| அண்ணன் | : | ஓ! மகிழ்ச்சி படமே பார்க்கலாம் வாங்க. |

# குறிப்புகள் / 参考

| தமிழ் | Chinese | Transliteration |
|---|---|---|
| வணக்கம் | 问候语 | vaṇakkam |
| தன்மை | 第一人称 | taṉmai |
| முன்னிலை | 第二人称 | muṉṉilai |
| படர்க்கை | 第三人称 | paṭarkkai |
| | | |
| 11.2 அறிவோம் | 11.2 学一学 | 11.2 aṟivōm |
| | | |
| மூவிடப் பெயர் | 人称代词 | mūviṭap peyar |
| (Persons I, II & III) | | (persons i, ii& iii) |
| நான் படிக்கிறேன் | 我在学习 | nāṉ paṭikkiṟēṉ |
| நாம் படிக்கிறோம் | 我们在学习 | nām paṭikkiṟōm |
| நீ ஓடுகிறாய் | 你在跑步 | nī ōṭukiṟāy |
| நீங்கள் ஓடுகிறீர்கள் | 你们都在跑步 | nīṅkaḷ ōṭukiṟīrkaḷ |
| அவள்  ஆடுகிறாள் | 她在跳舞 | avaḷ āṭukiṟāḷ |
| அவர்கள் ஆடுகிறார்கள் | 他们在跳舞 | avarkaḷ āṭukiṟārkaḷ |
| | | |
| காகம் பறந்து வந்தது. அது | 乌鸦飞来了 | kākam paṟantu vantatu. |
| மரக்கிளையில் அமர்ந்தது. | 它坐在树枝上 | atu marakkiḷaiyil amarntatu. |
| | | |
| மான்கள் குளத்தின் அருகே | 鹿来到池塘边 | māṉkaḷ kuḷattiṉ arukē |
| வந்தன. அவை நீர் குடித்தன. | 他们喝了水 | vantaṉa. avai nīr kuṭittaṉa. |
| | | |
| மூவிடப் பெயர் | 人称代词 | mūviṭap peyar |
| தன்மை | 第一人称 | taṉmai |
| தன்னைக் குறிப்பது | 指代说话人 | taṉṉaik kuṟippatu |
| நான், நாங்கள், நாம் | 我、我们、我们的 | nāṉ, nāṅkaḷ, nām |

| | | |
|---|---|---|
| முன்னிலை | 第二人称 | mun̲n̲ilai |
| தனக்கு முன்னே இருப்பவரைக் குறிப்பது | 指被称呼的一个或多个人 | tan̲akku mun̲n̲ē iruppavaraik kur̲ippatu |
| நீ, நீங்கள் | 你们、你们所有人 | nī, nīṅkaḷ |
| படர்க்கை | 第三人称 | paṭarkkai |
| தன்னையும், முன்னால் இருப்பவரையும் குறிக்காமல் மூன்றாவதாக இருப்பவரைக் குறிப்பது | 指说话人或被称呼的人以外的第三方 | tan̲n̲aiyum, mun̲n̲āl iruppavaraiyum kur̲ikkāmal mūn̲r̲āvatāka iruppavaraik kur̲ippatu |
| அவன், அவள், அவர், அது, அவை | 他、她、（他或她）、它、他们 | avan̲, avaḷ, avar, atu, avai |

## 11.4 சொல்லிப் பழகுவோம் 11.4 说一说，练一练 11.4 collip pal̲akuvōm

| | | |
|---|---|---|
| நான் பாடுகிறேன் | 我在唱歌。 | nān̲ pāṭukir̲ēn̲ |
| நீங்கள் விளையாடுகிறீர்கள் | 你在演奏 | nīṅkaḷ viḷaiyāṭukir̲īrkaḷ |
| அவன் எழுதுகிறான் | 他在写作。 | avan̲ el̲utukir̲ān̲ |
| அது மரம் | 它是一棵树 | atu maram |

## 11.5 பாடி மகிழ்வோம் | 11.5 pāṭi makiḻvōm

**ஓடி விளையாடு பாப்பா** | **Ōṭi viḷaiyāṭu pāppā**

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா
–பாரதியார்

ōṭi viḷaiyāṭu pāppā - nī
ōyntirukka lākātu pāppā
kūṭi viḷaiyāṭu pāppā - oru
kuḻantaiyai vaiyātē pāppā

kālai eḻuntavuṭaṉ paṭippu - piṉpu
kaṉivu koṭukkum nalla pāṭṭu
mālai muḻutum viḷaiyāṭṭu - eṉṟu
vaḻakkap paṭuttikkoḷḷu pāppā
-pāratiyār

## 11.6 听力理解.

### 购物中心

哥哥：你想买什么？

弟弟：我想买一块手表。

妹妹 :哥哥! 我想买一条丝绸裙子。

哥哥：好呀，我们一起去吧。

妹妹：他们在那儿玩的是什么？

哥哥：那是保龄球馆。

妹妹：哥哥，我们能去保龄球馆玩吗？

哥哥：好呀，我们一起去玩吧。

弟弟：哥哥! 我不知道怎么玩这个游戏。

哥哥：是吗？没关系，我们可以看电影。

弟弟：好的哥哥。我也这么想。

哥哥： 真棒！那就去看电影吧！"

## 11.6 Kēṭṭal karuttaṟital.

Vaṇika vaḷākam

Aṇṇaṉ : Uṅkaḷukku eṉṉa vēṇum?

Tampi : Eṉakkuk kaikkaṭikāram vēṇum.

Taṅkai : Aṇṇā! Eṉakkup paṭṭuppāvāṭai vēṇum.

Aṇṇaṉ : Cari, vāṅkalām.

Taṅkai : Aṅka eṉṉa viḷaiyāṭuṟāṅka?

Aṇṇaṉ : Atu pauliṅ alē (Bowling Alley)

taṅkai : Aṇṇā, nāma pōy viḷaiyāṭalāmā?

Aṇṇaṉ : Viḷaiyāṭalāmē.

Tampi : Aṇṇā, eṉakku inta viḷaiyāṭṭu viḷaiyāṭat teriyātē!

Aṇṇaṉ : Appaṭiyā, cari. Nāma paṭam pārkkalāmā?

Tampi : Āmām aṇṇā, nāṉum ataittāṉ niṉaiccēṉ.

Aṇṇaṉ : Ō! Makiḻcci paṭamē pārkkalām vāṅka.

# வணக்கம்

பாடம் / 第
12



## 12.1 பேசுவோம் / 说一说



### சொற்கள் / 单词

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு | பாலம் | கரை | வாழைப்பழம் | |
| கறை | பள்ளம் | நாணயம் | வானம் | நீலம் |

## 12.2 அறிவோம் / 学一学



பாலம்



பள்ளம்



வாழைப்பழம்



ஆலமரம்



இறகு



நத்தை



வானம்




நாணயம்



கரை



கறை



வலை



வளையல்




ஆனி மாதம்



ஆணி



மலை



மழை



வால்



வாள்

## 12.3 திரும்பப் படிப்போம் / 再读一遍

| | | | |
|---|---|---|---|
| பாலம் | பள்ளம் | வாழைப்பழம் | நத்தை |
| வானம் | நாணயம் | கரை | கறை |
| வலை | வளை | ஆனி | ஆணி |
| மலை | மழை | வால் | வாள் |

### புதிய சொற்கள்
### 生词

| | | | |
|---|---|---|---|
| புலி | புளி | கோலி | கோழி |
| அரம் | அறம் | ஊன் | ஊண் |
| தொழிலாளர் | | | |

## 12.4 சொல்லிப் பழகுவோம் / 说一说，练一练

ஒன்றில் பாதி அரை

$\frac{1}{2}$

வீட்டின் ஒரு பகுதி அறை



மேகம் பொழிவது மழை



உயர்ந்து நிற்பது மலை



தமிழ் மாதங்களில் ஒன்று ஆனி




சுவரில் அடிப்பது ஆணி



## 12.5 பாடி மகிழ்வோம் / 唱一唱



### குரங்கும் விழுதும்

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவி
கீழுள்ள விழுதை யெல்லாம்,
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

– பாரதிதாசன்

## பயிற்சிகள் / 练习

(அ) பொருத்துவோம் / (a) 连一连

| | | |
|---|---|---|
| ல் | நண்டு |  |
| ள் | மன்னன் |  |
| ழ் | கால் |  |
| ர் | வாள் |  |
| ற் | யாழ் |  |
| ந் | இளநீர் |  |
| ன் | புற்று |  |
| ண் | பந்து |  |

(ஆ) எழுதுவோம் / (b) 写一写



__________

வாள் /வால்



__________

மலை / மழை



__________

வலை / வளை



__________

புலி /புளி

(இ) விடுகதைகள் / (C) 猜谜语

(வெல்லம், மழை, வாழை, தண்ணீர்)

1. கிளை இல்லை; குலை உண்டு; நான் யார்?
2. வானில் இருந்து வருவேன்;
   வனத்திற்கு வளம் தருவேன் நான் யார்?
3. கட்டியாய் இருப்பேன்; கடித்தால் இனிப்பேன் நான் யார்?
4. ஆறாய் ஓடி வருவேன்;
   அணையில் கடந்து செல்வேன்; நான் யார்?

(ஈ) நிரப்புவோம் / (d) 填一填



மீனவன் __________ வீசினான்.

(வலை/ வளை)



புலி__________ தேடும்.

(இரை / இறை)



மாதவன் ____________ செய்கிறான்.

(பனி/ பணி)



பசு ____________ தரும்.

(பால் / பாழ்)

(உ) பொருத்தமானதை எழுதுவோம் / (e) 请写出适当的单词

1. ஆடு _________________ தின்னும்.



தழை



தலை

2. ஆற்றின் ஓரம் _________________



கறை



கரை

3. கடலின் நிறம் _________________



நீலம்




நீளம்

4. பொங்கலில் இடுவது ____________



வெள்ளம்



வெல்லம்

## 12.6 கேட்டல் கருத்தறிதல் / 听力理解

### பகிர்ந்து உண்போம் / 分享的乐趣



அம்மா சமைத்துக் கொண்டு இருந்தார். அங்கு வந்த சுமதி, "அம்மா, என்ன சமைக்கிறீங்க?" என்று கேட்டாள். "வா, சுமதி, கொழுக்கட்டை செய்கிறேன். உனக்குத்தான் ரொம்பப் பிடிக்குமே" என்றார். உடனே சுமதி, "அம்மா, என் தோழி இளமதிக்கும் கொழுக்கட்டை மிகவும் பிடிக்கும். அவளையும் கூட்டிட்டு வரட்டுமா?" என்று கேட்டாள். அம்மாவும் சரி என்றார். சமையலுக்கு உதவிக்கொண்டிருந்த அப்பா, "சுமதி, மாம்பழமும் இருக்கு", என்றார். "சரிப்பா, இளமதியையும் கூட்டிட்டு வந்துடுறேன். நாங்க சேர்ந்தே சாப்பிடுறோம்" என்று கூறினாள். தன் தோழியை அழைக்க ஓடினாள்.

# குறிப்புகள் / 参考

| தமிழ் | Chinese | Transliteration |
|---|---|---|
| வணக்கம் | 问候语 | vaṇakkam |
| 12.1 பேசுவோம் | 12.1 说一说 | 12.1 pēcuvōm |
| சொற்கள் | 单词 | coṟkaḷ |
| ஆறு | 河流 | āṟu |
| பாலம் | 桥梁 | pālam |
| கரை | 河岸 | karai |
| வாழைப்பழம் | 香蕉 | vāḻaippaḻam |
| கறை | 污渍 | kaṟai |
| பள்ளம் | 坑 | paḷḷam |
| நாணயம் | 硬币 | nāṇayam |
| வானம் | 天空 | vāṉam |
| நீலம் | 蓝色 | nīlam |

| | | |
|---|---|---|
| 12.2 அறிவோம் | 12.2 学一学 | 12.2.aṟivōm |
| பாலம் | 桥梁 | pālam |
| பள்ளம் | 坑 | paḷḷam |
| வாழைப்பழம் | 香蕉 | vāḻaippaḻam |
| ஆலமரம் | 榕树 | ālamaram |
| இறகு | 羽毛 | iṟaku |
| நத்தை | 蜗牛 | nattai |
| வானம் | 天空 | vāṉam |
| நாணயம் | 硬币 | nāṇayam |
| கரை | 河岸 | karai |
| கறை | 污渍 | kaṟai |
| வலை | 网 | valai |
| வளையல் | 手镯 | vaḷai |

| | | |
|---|---|---|
| ஆனி மாதம் | Aani （泰米尔历的第三个月） | āṉi mātam |
| ஆணி | 钉子 | āṇi |
| மலை | 山地 | malai |
| மழை | 雨 | maḻai |
| வால் | 尾巴 | vāl |
| வாள் | 剑 | vāḷ |

| புதிய சொற்கள் | 生词 | putiya coṟkaḷ |
|---|---|---|
| புலி | 老虎 | puli |
| புளி | 罗望子 | puḷi |
| கோலி | 大理石 | kōli |
| கோழி | 母鸡 | kōḻi |
| அரம் | 锯 | aram |
| அறம் | 美德 | aṟam |
| ஊன் | 肉类 | ūṉ |
| ஊண் | 食物 | ūṇ |
| தொழிலாளர் | 劳力 | toḻilāḷar |

## 12.4 சொல்லிப் பழகுவோம் 12.4 说一说，练一练 12.4 collip paḻakuvōm

| | | |
|---|---|---|
| ஒன்றில் பாதி அரை | 把一份分成相等的两份就是一半 | oṉṟil pāti arai |
| வீட்டின் பகுதி அறை | 房子的一部分就是一个房间 | vīṭṭiṉ pakuti aṟai |
